உ

சிவமயம்



காட்டுப்புலம்பதி

அரசடி ஸ்ரீ

# ஆதிவைரவர் ஆலய

கூட்டுப்பிரார்த்தனைத்

# தோத்திரப் பாடல்கள்

தொகுப்பு: வித்துவான் பொன். அ. கனகசபை
புங்குடுதீவு.

உ

சிவமயம்

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

கூட்டுப் பிரார்த்தனைத்

# தோத்திரப்பாடல்கள்




தொகுப்பு:

வித்துவான் பொன். அ. கனகசபை.

புங்குடுதீவு.



வெளியீடு:

காட்டுப்புலம்பதி,

அரசடி ஸ்ரீ ஆதிவைரவர் ஆலய

பரிபாலனசபை.

புங்குடுதீவு-2,

இலங்கை.

தொகுத்தவர்:

வித்துவான் பொன். அ. கனகசபை அவர்கள்
புங்குடுதீவு.

வெளியீடு: காட்டுப்புலம்பதி அரசடி ஸ்ரீ ஆதிவைரவர்
ஆலயபரிபாலனசபை, புங்குடுதீவு 2,
இலங்கை.

பதிப்பு: முதற்பதிப்பு, ஆனி 1990

படிகள்: 500

பக்கம்: 83

அச்சுப்பதிப்பு: ஸ்ரீ லங்கா அச்சகம்,
234 ஏ, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தூயி தசாம்ச பகுப்பெண்; 200-294.5;

பதிப்புரிமை:

கனகசபை அறக்கட்டளை, புங்குடுதீவு.

அன்பளிப்பு ஸ்ரீ லங்கா அச்சகம், யாழ்ப்பாணம்.

உ

சிவமயம்

# முன்னுரை

சொல்லில் அடங்காத செம்பொருளாகிய இறைவனைச் சொற்கொண்டு போற்றியும், சொல்லின் உட்கருத் தறிந்தும், உணர்ந்தும், தெளிந்தும் இறைவனை வேண்டியும் சொன்ன எல்லாவற்றுக்கும் மேலான இறைவன் சொரு பத்தை உள்ளுணர்ந்து போற்றுபவரே வானோர்க்கு உயர்ந்த உலகமாகிய சிவபுரத்தின்கண்சென்று சேர்வர் என்பது மணிவாசகப் பெருமான்தன் பெருவாக்கா கும்; எனவே பரம்பொருளாய் விளங்கும் எம்பெருமானை மக்கள் வழிபட்டுப் பேரின்பப் பெருவாழ்வைப் பெறவேண் டும். வையத்துள் வாழ்வாங்கு வாழவேண்டும்; மக்கள் உள்ளங்களில் தெய்வ நம்பிக்கை, உயர்ந்த இலட்சியங்கள், பாரம்பரியப்பற்று ஆகியன வளரவேண்டும்; எல்லோர் உள்ளத்திலும் சைவசமய ஞானமும், சைவசமய ஈடு பாடும் கைவரப் பெற்று நீதி, நேர்மையான சமுதாய வாழ்வு வளர்ந்திட, மலர்ந்திட வேண்டுமென்ற வேணவாக் கொண்டு புங்குடுதீவு நடுவண் காட்டுப்புலம்பதியில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் அரசடி ஸ்ரீ ஆதி வைரவப் பெருமான் ஆலய பரிபாலன சபையாரின் ஆலோ சனையின்பேரில் சிவதொண்டே பெருந்தொண்டாய் எண்ணி இயங்கும் சைவப்பெரியார், எம்மண்ணகத்தே பிறந்து வாழும் நல்லார், உயர்திரு. வித்துவான் பொன். அ. கனக சபை அவர்களைப் பணிவன்புடன் வேண்டிக்கொண்டதற் கிணங்கி ஆலயங்கள் தோறும், இல்லங்கள்தோறும், மெய் யன்பர்கள் கூட்டங்கள்தோறும், பள்ளிச் சிறார்களும், பக்தி செய்வோர்களும், படித்துப் பாராயணம் செய்துகொள்ள, பாடிப்பரவிப் பயன் எய்த இயைந்ததாயும், ஏற்றதாயும், இலகுவானதாயும், எழிலார்ந்ததாயும், வகுத்தும், பிரித் தும், தொகுத்தும், பிழை திருத்தியும் சிரமம் பாராது இத்

தோத்திர நூலைச் சிவ தொண்டாய்க் கருதி உருவாக்கி உதவியமைக்கு நாம் அவர்கட்கு என்றென்றும் கடப்பாடுடையோம். ஆதலால் மேற்படி ஆலயபரிபாலன சபையின் சார்பாக முதற்கண் வணக்கமும், நன்றியும் உரியதாகும்.

இத்தோத்திர நூலை பக்திசெய் மெய்யடியார், அன்பர்களுக்காக அன்புகொண்டு மனம் உவந்து அன்பளிப்பாய்ப் பதிப்பித்துதவிய யாழ்- ஸ்ரீலங்கா அச்சக உரிமையாளர் உயர்திரு ச. சிவராமன் அவர்கட்கும், அவர் தம் பாரியாருக்கும், ஒத்தாசை புரிந்துதவிய அச்சக உதவியாளர்களுக்கும், வேலைப்பழுவை மனத்திருத்தாது ஒத்துழைப்பு நல்கிய ஏனைய அச்சகத் தொண்டர்களுக்கும் ஷ பரிபாலன சபைசார்பில் உளங் கனிந்த நன்றியும், பாராட்டும் உரித்தாகும்.

இந்நூல் பக்திநூலாக, அருள்நெறிநூலாகத், தெய்வத் தமிழ் நூலாக எல்லோர் கைகளிலும் தவழவேண்டும். மிளிரவேண்டுமென இறைவன் திருவருளை வேண்டி நிற்கின்றோம்.

வணக்கம்

அரசடி ஸ்ரீ ஆதிவைரவர்
ஆலய பரிபாலன சபையார்.

புங்குடுதீவு -2,
இலங்கை,
12-06-1990

உ
சிவமயம்

# சைவத் திருமுறையும் ஓதும்மரபும்

ஆரியவேதத்தையும் தமிழ்த்திருமுறையையும் அருளியவர் சிவபெருமான். நாயன்மார் இருபத்தெழுவரை அதிட்டித்து நின்று சிவன் திருமுறைகளைத் தோற்றுவித்தார். திருமுறைகள் சிவனுக்கு மந்திரத்திருமேனி. விக்கிரகத்தில் ஒரு கணம் விளங்கித் தோன்றும் சிவன், திருமுறையில் எப்பொழுதும் விளங்கியருளுகின்றார். யாவையுங் கடந்த சிவனையும், சிவனைத் தம் உள்ளத்தடக்கிய சிவதொண்டரையுந் தன்னுள்ளடக்கி வைத்திருக்கும் அரும்பெரும் பெருமைவாய்ந்தது திருமுறை.

வேதம் விண்ணினின்றும் இறங்கி வந்தமையால், 'வேதம் அவதாரயாத்' என்று கடவுட் சந்நிதானங்களிற் கட்டியம் உரைத்தல் மரபு; ஆனால் தேவாரம் முதலிய திருமுறைகள் அருளாளர் உணர்வில் ஊற்றெடுத்து அவர்களின் மலர் வாயாற் பிரவாகித்தமையினால், 'தேவாரம் அருளிப்பாடுக திருவாசகம் அருளிப்பாடுக' எனக் கட்டியம் உரைக்கும் மரபு பண்டுதொட்டு இருந்துவருகின்றது. (அருளிப்பாடு – கட்டளை ஏவல்) அருளிப்பாடுக என்பது தெய்வசம்பந்தமான மரியாதைக்குரிய ஏவல். அந்த ஏவலை நிறைவேற்றுவோர் அருளிப் பாடியர் எனப்பட்டனர். அதற்கான ஆதாரங்கள் தேவாரங்களிற் காணப்படுகின்றன. எவ்வித ஆதாரமுமில்லாமல், ஆன்றோர் மரபுக்கு மாறாக 'அருளியது பாடுக' எனவும் வேறுவகையாயுங் கட்டியம் உரைப்பது பிராயச்சித்தஞ் செய்யமுடியாத பெருந் தோஷம். அதனால் உபயகாரர், வழிபடுவோர், ஆலய நிருவாகிகள் அனைவருக்கும் கேடு உண்டாகும்.

திருமுறைகளை ஓதுந் தகுதியுடைய ஒருவராவது, பலர் சேர்ந்தாவது ஓதலாம். பலர்சேர்ந்து ஓதுதலே சிறந்தது. திருமுறையில் சம்பந்தர் செந்தமிழ் 'ஒருத்த ராகிலும் பலர்

களாகிலும் உரைசெய்வார் உயர்ந்தார்களே' என வருதல் காண்க.

மார்கழித் திருவெம்பாவைக் காலத்தில் திருவாசகந் தவிர ஏனைய திருமுறைகள் காப்பிட்டு வைக்கப்படும். அக்காலம் 'திருமுறைக் காப்பு' எனப்படும். ஆன்மார்த்த பரார்த்த பூசை, சமயவிழா, திருவிழா முதலியவற்றில் திருவெம்பாவை முழுப்பாடல்களையுமோ அல்லது முதல் கடைசி இருபாடல்களையுமோ ஓதுதல் மரபு. திருவாதிரைவிழா முடிவில் முறைப்படி பஞ்சபுராணம்பாடித் திருமுறைக் காப்பு அவிழ்க்கப்படும்.

தேவாலயத்திலே திருமுறை ஓதுபவர் சமய தீட்சை பெற்றவராயும், மதுபானம், மச்சமாமிசபோசனம் இல்லாதவராயும், விபூதி உருத்திராக்கந்தரித்த சமயாசாரம் உள்ளவராயும், ஒழுங்குக் கிரமந்தவறாது திருமுறைகளைப் பிழையின்றிப் பண்ணிசையோடு பயபக்தியாய்ப் பாடவல்லவராயும் இருத்தலே உத்தமம். அத்தகுதி உடையோர் இல்லாவிடில் பக்தியுடைய ஆசாரசீலர் பாடலாம். ஆலயத்தில் சாதாரண கிரியைகளிற் பண்அமைவுபெற்ற பஞ்சபுராணமும், விசேடகிரியைகளிற் பன்னிருதிருமுறைகளும் ஓதுதல் வழமை. புராணஞ் சொல்லிமுடிந்தபின்புதான் திருப்புகழ், அபிராமியந்தாதி, பட்டினத்தார்பாடல் போன்றவற்றைப் படிக்கவேண்டும். விநாயகர், முருகன், வைரவர், அம்மன் சந்நிதானங்களிலே அவ்வக் கடவுளரைப்பற்றி வியந்து பாடப் பெற்ற பாடல்களைப் பாடவேண்டும். தெய்வசந்நிதிகளிற் சொல்லையோ சொற்றொடரையோ திருப்பிப்பாடுதல் கூடாது. திருமுறைப்பண்கள் சுத்தநாதமயமானவை. அவை ஞானகாயமான திருச்சிற்றம்பலத்திலுள்ளன. பண்ணை ஓதத் தொடங்கும்போது முதலில் உற்பத்திக் கிரமமாக "திருச்சிற்றம்பலம்" என்று உரத்துச் சொல்லவேண்டும். பாடிக் கடைசியிலும் "திருச்சிற்றம்பலம்" என்று உரத்துச் சொல்லி ஞானகாயத்தில் ஒடுக்கிவிடவேண்டும். ஓதுபவர் "திருச்சிற்றம்பலம்" என்று முதலில் உரத்துக்கூறியவுடனே

கேட்போர், சப்பாணியிட்டுக் கைகளைக்குவித்துப் பிரமாஞ்சலி சகிதராய்க் கேட்கவேண்டும். வான்முகில் என்ற வாழ்த்து ஓதி முடிந்ததும் ஓதுபவர் ''நமப்பார்வதிபதயே'' என்றதும், கேட்போர் அரஹரமகாதேவா என்ற மகுடம் இட்டுப், பூசித்தபயனைச் சிவனுக்கு அர்ப்பணஞ்செய்து பூர்த்தியாக்க வேண்டும்.

திருமுறை ஓதியதன் பின்னர் பிராயச்சித்தமும் பிறவுமாகச் சொல்லப்படும் ஆசீர்வாதத்துடன் பூசை முடிவடையும்.

**வித்துவான். பொன். அ. கனகசபை,**

# பொருளடக்கம்


விடயம் பக்கம்

முன்னுரை

சைவத் திருமுறையும் ஓதும்மரபும்

1. திருஞானசம்பந்தர் அருளிச்செய்த தேவாரம்
   - (i) முதலாந் திருமுறை 1
   - (ii) இரண்டாந் திருமுறை 2
   - (iii) மூன்றாந் திருமுறை 3
2. திருநாவுக்கரசர் அருளிச்செய்த தேவாரம்
   - (i) நான்காந் திருமுறை 4
   - (ii) ஐந்தாந் திருமுறை 5
   - (iii) ஆறாந் திருமுறை 8
   - (iv) அருச்சனைப் பதிகம் 9
3. சுந்தரர் அருளிச்செய்த தேவாரம்
   - (i) ஏழாந் திருமுறை 12
4. மாணிக்கவாசகர் அருளிச்செய்த திருவாசகம், [திருக்கோவை
   - எட்டாந் திருமுறை
   - (i) சிவபுராணம் 13
   - (ii) திருப்பள்ளியெழுச்சி 16
   - (iii) திருவெம்பாவை 19
   - (iv) திருப்பொற் சுண்ணம் 25
   - (v) திருச்சாழல் 30
   - (vi) திருச்சிற்றம்பலக்கோவை 32
5. திருமாளிகைத்தேவர் முதலியோர் அருளிச் [செய்த
   - திருவிசைப்பா
   - சேந்தனார் அருளிச்செய்த
     - திருப்பல்லாண்டு
     - ஒன்பதாந் திருமுறை 33-35

6. திருமூலர் அருளிச்செய்த
திருமந்திரம்
பத்தாந் திருமுறை 36
7. திருவாலவாயுடையார் முதலியோர் அருளிச்
[செய்த பிரபந்தங்கள்
பதினோராந் திருமுறை 37
8. சேக்கிழார் அருளிச்செய்த திருத்தொண்டர்
[புராணம்
பன்னிரண்டாந் திருமுறை 38
9, தேவாரம் முழுத்திருப்பதிகங்களின் அட்டவணை
(i) சம்பந்தர் திருநீற்றுப்பதிகம் 40-42
(ii) ,, கோளறு திருப்பதிகம் 42-45
(iii) அப்பர் திருமறைக்காட்டுப் பதிகம் 6-7
(iv) ,, போற்றித் திருத்தாண்டகம் 9-11
10 ஔவையார் அருளிச்செய்த விநாயகர் அகவல் 46-48
11. தெய்வத் திருமுன் பாடுந் தோத்திரம் 49-55
12. வைரவக்கடவுள் தோத்திரப்பாடல் 55-57
13. திருமால் திவ்விய பிரபந்தப் பாடல்கள் 58
14. சகல கலா வல்லிமாலை 59-61
15. அபிராமி அந்தாதி 61-63
16. அபிராமி அம்மை பதிகம் 62-63
17. ஏடு தொடக்கலுக்கு முக்கியமான பாடல் 63
18. கொடியேற்ற நவசந்திப் பாடல் 63
19. மங்களம் வாழ்த்து 67
20. நாம பஜனை 68-72
21. கொடிக்கவி 73

# பிழைதிருத்தம்

| பிழை | பக்கம் | வரி | திருத்தம் |
|---|---|---|---|
| உணர்வு | 5 | 28 | உணர்வுக் |
| செல்லா அநின்ற | 14 | 17 | செல்லா அ நின்ற |
| றண்ணலாங் | 16 | 31 | றண்ணலங் |
| ளேயுன் | 18 | 27 | ளேயுன |
| றேமவ | 19 | 7 | ஞேமவ |
| சிசி | 19 | 29 | சிசி |
| 1 | 22 | 13 | 11 |
| மிப்பரு | 29 | 15 | மிம்பரு |
| மாயிஞர்க்குப் | 30 | 5 | மாயினர்க்குப் |
| கண்கள | 33 | 20 | கண்கள் |
| இனிதாத | 33 | 23 | இனிதாத் |
| வஞ்சசர் | 34 | 26 | வஞ்சகர் |
| பனுவலும | 60 | 19 | பனுவலும் |
| ாட்டும் | 60 | 32 | காட்டும் |
| காவளான் | 63 | 21 | காவுளான் |
| யாடியவர் | 63 | 25 | பாடியவர் |
| லலைந்தும் | 64 | 3 | புலலைந்தும் |

உ

# திருஞானசம்பந்தர்

## அருளிச்செய்த தேவாரம்

# முதலாந் திருமுறை.

திருவலிவலம் பண்—வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்.

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

திருப்பிரமபுரம் பண் – நட்டபாடை.

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண் மதிசூடி
காடுடையசுடலைப்பொடிபூசியென் னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவ னன்றே.

திருச்சிராப்பள்ளி பண்— குறிஞ்சி

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளேறு
ஒன்றுடையானை உமையொருபாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளங் குளிருமே.

திருக்கோலக்கா பண்-தக்கராகம்

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட உருவம் என்கொலோ.

திருச்சிற்றம்பலம்.

---

அன்பளிப்பு: ஸ்ரீ லங்கா அச்சகம்

# இரண்டாந் திருமுறை.

திருக்கேதீச்சரம் பண்-நட்டராகம்

திருச்சிற்றம்பலம்.

விருது குன்றமா மேருவில் நாணர வாஅன லெரியம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின் றுறைபதி
[யெந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ் பொழிலணி
[மாதோட்டம்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக் கடுவினை யடையாவே.

திருவெண்காடு பண்-சீகாமரம்

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினே டுள்ளநினைவு
ஆயினவே வரம்பெறுவர் ஐயுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே.

திருப்புள்ளிருக்கு வேளூர் பண்- சீகாமரம்

சீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம்
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே.

திருவாலவாய் பண்- காந்தாரம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே.

திருச்சிற்றம்பலம்.

# மூன்றுந் திருமுறை.

**திருக்கோணமலை** **பண்- புறநீர்மை**

திருச்சிற்றம்பலம்.

நிரைகழல் அரவஞ் சிலம்பொலி யலம்பும் நிமலர்நீ றணி
[திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த வடிவினர்
[கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும் அளப்பருங் கனமணி
[வரன்றிக்
குரைகட லோதம் நித்திலங் கொழிக்குங் கோணமா மலை
[யமர்ந் தாரே.

**திருப்பிரமபுரம்** **பண்- கொல்லி**

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணின்நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணின்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

**திருவாவடுதுறை** **பண்- காந்தாரபஞ்சமம்**

இடரினுந் தளரினு மெனதுறுநோய்
தொடரினு முனகழல் தொழுதெழுவேன்
கடல்தனி லமுதொடு கலந்தநஞ்சை
மிடற்றினி லடக்கிய வேதியனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை அரனே.

பொது **(நமச்சிவாயத்திருப்பதிகம்)** **பண்- கௌசிகம்**

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத னாம நமச்சி வாயவே.

திருச்சிற்றம்பலம்.

அன்பளிப்பு: ஸ்ரீ லங்கா அச்சகம்

உ

# திருநாவுக்கரசர்

## அருளிச்செய்த தேவாரம்

# நான்காந் திருமுறை.

**திருவதிகை வீரட்டானம்** பண்– கொல்லி

திருச்சிற்றம்பலம்.

கூற்றாயின வாறு விலக்ககிலீர் கொடுமைபல செய்தன
[நானறியேன்
ஏற்றாயடிக் கேஇர வும்பகலும் பிரியாது வணங்குவன்
[எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே குடரோடு துடக்கி
[முடக்கியிட
ஆற்றேனடி யேன்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை
[அம்மானே.

**பொது** **தனித்திருவிருத்தம்**

சிவன்எனும் நாமம் தனக்கே உடையசெம் மேனிஎம்மான்
அவனெனை ஆட்கொண் டளித்திடு மாகில் அவன்தனையான்
பவன்எனும் நாமம் பிடித்துத் திரிந்துபன் னாள்
[அழைத்தால்
இவன்எனைப் பன்னாள் அழைப்பொழி யான்என்று
[எதிர்ப்படுமே.

**திருக்கச்சியேகம்பம்** **திருவிருத்தம்**

கருவுற்ற நாள்முத லாகவுன் பாதமே காண்பதற்கு
உருகிற்றென் உள்ளமும் நானுங் கிடந்தலந்து
[எய்த்தொழிந்தேன்
திருவொற்றி யூரா திருவால வாயாதிரு வாரூரா
ஒருபற்றி லாமையுங் கண்டிரங் காய்கச்சி யேகம்பனே.

**பொது நமச்சிவாயத்திருப்பதிகம் பண்–காந்தார பஞ்சமம்**

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

**கோயில் திருவிருத்தம்**

வாய்த்தது நந்தமக் கீதோர் பிறவி மதித்திடுமின்
பார்த்தற்குப் பாசு பதமருள் செய்தவன் பத்தருள்ளீர்
கோத்தன்று முப்புரந் தீவளைத் தான்தில்லை யம்பலத்துக்
கூத்தனுக் காட்பட் டிருப்பதன் றோநந்தங் கூழைமையே.

திருச்சிற்றம்பலம்.

# ஐந்தாந் திருமுறை.

**பொது தனித்திருக்குறுந்தொகை**

திருச்சிற்றம்பலம்.

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.

**பொது தனித்திருக்குறுந்தொகை**

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே.

**பொது தனித்திருக்குறுந்தொகை**

விறகில் தீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே.

திருச்சிற்றம்பலம்.

---

திருமறைக்காடு திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்.

பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னூர்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னூலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே, 1

ஈண்டு செஞ்சடை யாகத்துள் ஈசரோ
மூண்ட கார்முகி லின்முறிக் கண்டரோ
ஆண்டு கொண்டநீ ரேஅருள் செய்திடும்
நீண்ட மாக்கத வின்வலி நீக்குமே. 2

அட்ட மூர்த்திய தாகிய அப்பரோ
துட்டர் வான்புரஞ் சுட்ட சுவண்டரோ
பட்டங் கட்டிய சென்னிப் பரமரோ
சட்ட இக்கத வந்திறப் பிம்மினே. 3

அரிய நான்மறை யோதிய நாவரோ
பெரிய வான்புரஞ் சுட்ட சுவண்டரோ
விரிகொள் கோவண ஆடை விருத்தரோ
பெரிய வான்கத வம்பிரி விக்கவே. 4

மலையில் நீடிருக் கும்மறைக் காடரோ
கலைகள் வந்திறைஞ் சுங்கழல் ஏத்தரோ
விலையில் மாமணி வண்ண உருவரோ
தொலைவி லாக்கத வந்துணை நீக்குமே. 5

பூக்குந் தாழை புறணி அருகெலாம்
ஆக்குந் தண்பொழில் சூழ்மறைக் காடரோ
ஆர்க்குங் காண்பரி யீர்அடி கேள்உமை
நோக்கிக் காணக் கதவைத் திறவுமே. 6

வெந்த வெண்பொடிப் பூசும் விகிர்தரோ
அந்த மில்லி அணிமறைக் காடரோ
எந்தை நீஅடி யார்வந் திறைஞ்சிட
இந்த மாக்கத வம்பிணி நீக்குமே. 7

ஆறு சூடும் அணிமறைக் காடரோ
கூறு மாதுமைக் கீந்த குழகரோ
ஏற தேறிய எம்பெரு மான்இந்த
மாறி லாக்கத வம்வலி நீக்குமே. 8

சுண்ண வெண்பொடிப் பூசுஞ் சுவண்டரோ
பண்ணி யேறுகந் தேறும் பரமரோ
அண்ண லாதி அணிமறைக் காடரோ
திண்ண மாக்கத வந்திறப் பிம்மினே. 9

விண்ணு ளார்விரும் பியெதிர் கொள்ளவே
மண்ணு ளார்வணங் கும்மறைக் காடரோ
கண்ணி னலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே. 10

அரக்க னைவிர லால்அடர்த் திட்டநீர்
இரக்க மொன்றிலீர் எம்பெரு மானிரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக்க இக்கத வந்திறப் பிம்மினே. 11

திருச்சிற்றம்பலம்.

அன்பளிப்பு: ஸ்ரீ லங்கா அச்சகம்

# ஆறந் திருமுறை.

திருவாரூர் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
 நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
 பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
 சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ யென்றும்
 ஆரூரா என்றென்றே அலறு நில்லே.

திருவாவடுதுறை திருத்தாண்டகம்

திருவேயென் செல்வமே தேனே வானோர்
 செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதி மிக்க
உருவே என்னுறவேஎன் ஊனே ஊனின்
 உள்ளமே உள்ளத்தின் உள்ளே நின்ற
கருவேஎன் கற்பகமே கண்ணே கண்ணிற்
 கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
 ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே.

திருக்காளத்தி திருத்தாண்டகம்

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கி னுள்ளான்
 வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின் மேலான்
 ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொற்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதி னுள்ளான்
 பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றினுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சி யுள்ளான்
 காளத்தி யானவனென் கண்ணு ளானே.

திருச்சிற்றம்பலம்.

# அருச்சனைப் பதிகம்.

திருச்சிற்றம்பலம்.

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி
காற்றாகி எங்குங் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 1

பிச்சாடல் பேயோ டுகந்தாய் போற்றி
பிறவி அறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்று மெய்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாக மசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 2

மருவார் புரமூன்று மெய்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி என்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி யொளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி யோடும் முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 3



234ஏ, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கும் உடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீ யாடல் உகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 4

ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி எங்கும் பரந்தாய் போற்றி
பெயராதென் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி யான நிழலே போற்றி
நேர்வார் ஒருவரையும் இல்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 5

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவர் அறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி உலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 6

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்துஞ்சொல் ஆனாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணு நிலனுந்தீ ஆனாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 7

அன்பளிப்பு: ஸ்ரீ லங்கா அச்சகம்,

இமையா துயிரா திருந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாகம் ஆகத் தணைத்தாய் போற்றி
ஊழிஏ ழான ஒருவா போற்றி
அமையா அருநஞ்சம் ஆர்ந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
கமைஆகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 8

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர் கொழுந்தே போற்றி
சென்றேறி எங்கும் பரந்தாய் போற்றி
ஆவா அடியேனுக் கெல்லாம் போற்றி
அல்லல் நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 9

நெடிய விசும்பொடு கண்ணே போற்றி
நீள அகலம் உடையாய் போற்றி
அடியு முடியும் இகலிப் போற்றி
அங்கொன் றறியாமை நின்றாய் போற்றி
கொடியவன் கூற்றம் உதைத்தாய் போற்றி
கோயிலா என்சிந்தை கொண்டாய் போற்றி
கடிய உருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 10

உண்ணா துறங்காது இருந்தாய் போற்றி
ஓதாதே வேதம் உணர்ந்தாய் போற்றி
எண்ணா இலங்கைக்கோன் தன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி
பண்ணார் இசையின்சொற் கேட்டாய் போற்றி
பண்டேஎன் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணா யுலகுக்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 11

திருச்சிற்றம்பலம்.

## சுந்தரர்
## அருளிச்செய்த தேவாரம்
# ஏழாந்திருமுறை.

**திருவெண்ணெய் நல்லூர் (குருவருள்)** பண்–இந்தளம்

திருச்சிற்றம்பலம்.

பித்தாபிறை சூடிபெரு மானேஅரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர்
[அருட் டுறையுள்
அத்தாஉனக் காளாய்இனி அல்லேன்எனல் ஆமே.

**திருப்பாண்டிக் கொடுமுடி** பண்–பழம்பஞ்சுரம்

மற்றுப்பற்றெனக் கின்றிநின்திருப் பாதமேமனம்
[பாவித்தேன்
பெற்றலும்பிறந் தேனினிப்பிற வாததன்மைவந்
[தெய்தினேன்
சுற்றவர்தொழு தேத்துஞ்சீர்க்கறை யூரிற்பாண்டிக்
[கொடுமுடி
நற்றவாவுனை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்
[சிவாயவே.

**திருவாரூர்** பண்–தக்கேசி

பொன்னும் மெய்ப்பொரு ளும்தரு வானைப்
போக முந்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை என்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மையன் என்றறி வொண்ணா
எம்மா னைஎளி வந்தபி ரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்தணி
ஆரு ரானை மறக்கலு மாமே.

---

திருக்கேதிச்சரம் பண்– நட்டபாடை

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே.

திருச்சிற்றம்பலம்

---

# மாணிக்கவாசகர் அருளிச் செய்த
# திருவாசகம், திருக்கோவையார்
# எட்டாந் திருமுறை.

## திருவாசகம்

### சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்.

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன்கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்னன் அடிபோற்றி

சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன்பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னும்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய்ச் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்

நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்
[தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்

தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.

## திருப்பெருந்துறையில் பாடியருளிய

# திருப்பள்ளியெழுச்சி.

திருச்சிற்றம்பலம்.

போற்றியென் வாழ்முதல் ஆகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாயெனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

அருணன்இந் திரன்திசை அணுகின னிருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலாங் கண்ணாம்

திரள்நிரை அறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே.

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை யொளிஒளி உதயத்து
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரு மறிவரி யாயெமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

பூதங்கள் தோறுநின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோமுனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாயெங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெமை யாண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
 பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
 வணங்குகின் றாரணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
 திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை யாண்டருள் புரியும்
 எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

அதுபழச் சுவையென அமுதென அறிதற்(கு)
 அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே
 எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு உத்தர கோச
 மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுவெமைப் பணிகொளு மாறது கேட்போம்
 எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

முந்திய முதல்நடு இறுதியு மானாய்
 மூவரு மறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயுந்நின் அடியார்
 பழங்குடில் தொறுமெழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டி
 திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி
அந்தண னாவதும் காட்டிவந் தாண்டாய்
 ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே.

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
 விழுப்பொரு ளேயுன் தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
 வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்

கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாயுல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

புவனியில் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றேமவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின் ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே.

திருச்சிற்றம்பலம்,

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

# திருவெம்பாவை.

திருச்சிற்றம்பலம்.

ஆதியு மந்தமு மில்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மே னின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தா ளென்னேயென்னே
ஈதே யெந்தோழி பரிசேலோ ரெம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதிக் கென்பா யிராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி

ஏகமிட மீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய். 2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந்தெதி ரெழுந்தென்
அத்தனா னந்த னமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீ ரீசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் னன்புடைமை யெல்லோ மறியோமோ
சித்த மழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டு மெமக்கேலோ ரெம்பாவாய். 3

ஒண்ணித் திலநகையா யின்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோ மவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையிற் றுயிலேலோ ரெம்பாவாய். 4

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே யறிவரியான்
கோலமு நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோல மிடினு முணரா யுணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவ னென்றலு நாணாமே
போன திசைபகரா யின்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே யறிவரியான்

தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே யுருகா யுனக்கே யுறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய். 6

அன்னே யிவையுஞ் சிலவோ பலவமரர்
உன்னற் கரியா னொருவ னிருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை யென்னரைய னின்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறா யின்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கு
மேழி லியம்ப இயம்பும்வெண் சங்கெங்குங்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழியீ தென்ன வுறக்கமோ வாய்திறவாய்
ஆழியா னன்புடைமை யாமாறு மிவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற வொருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். 8

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் 'பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோ மாங்கவர்க்கே
[பாங்காவோம்
அன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோ னல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய். 9

பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியு மெல்லாப் பொருண்முடிவே
பேதை யொருபாற் றிருமேனி யொன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலும்

ஓத வுலவா வொருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூ ரேதவன்பே ராருற்றா ராரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்கா ணாரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ யாட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்க ளுய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பா யெமையேலோ ரெம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநா மார்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமு மெல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழன்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி யிருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியு மெங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 13

காதார் குழையாடப் பைப்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி யப்பொருளா மாபாடிச்

அன்பளிப்பு: ஸ்ரீ லங்கா அச்சகம்,

சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி யந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய், 14

ஓரொருகா லெம்பெருமா னென்னென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகா லோவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணி
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறும் [யாள்
ஆரொருவ ரிவ்வண்ண மாட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை யாளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமா னன்பர்க்கு
முன்னி யவணமக்கு முன்சுரக்கு மின்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். 16

செங்கணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கு மிலாததோ ரின்பநம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் மில்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்க ணரசை யடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 17

அண்ணா மலையா னடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போற்
கண்ணா ரிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ரொளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்

பெண்ணாகி யாணா யலியாய்ப் பிறங்கொளிசேர்
    விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
    பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ
        [ரெம்பாவாய் 18

உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
    றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமா னுனக்கொன் றுரைப்போங்கேள்
    எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
    கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியேல்
    எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய், 19

போற்றி யருளுகநின் னாதியாம் பாதமலர்
    போற்றி யருளுகநின் வந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
    போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கு மீறா மிணையடிகள்
    போற்றிமா னான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
    போற்றியா மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய், 20

திருச்சிற்றம்பலம்.

மாணிக்கவாசக சுவாமிகளால்
தில்லையில் அருளிச் செய்யப்பட்ட

# திருப்பொற்சுண்ணம்.

திருச்சிற்றம்பலம்.

முத்துநற் றாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபநற் றீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியுங்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறனம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ண மிடித்துநாமே! 1

பூவியல் வார்சடை யெம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ண மிடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் றொண்டர் புறம்நிலாமே
குனிமின் றொழுமினெங் கோனெங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ண மிடித்துநாமே! 2

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோனயன் றன்பெருமான்
ஆழியான் நாதனல் வேலன்தாதை
எந்தர மாளுமை யாள்கொழுநற்
கேய்ந்தபொற் சுண்ண மிடித்துநாமே! 3

காசணி மின்களு லக்கையெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலே
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே! 4

அறுகெடுப் பாரய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெ டுக்கவொட்டோஞ்
செறிவுடை மும்மதி லெய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே! 5

உலக்கை பலவோச்சு வார்பெரிய
ருலகமெ லாமுரல் போதாதென்றே
கலக்க வடியவர் வந்துநின்றார்
காண வுலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை யாண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ண மிடித்துநாமே! 6

சூடகந் தோள்வளை யார்ப்பவார்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பவார்ப்பப்
நாடவர் நந்தம்மை யார்ப்பவார்ப்ப
நாமு மவர்தம்மை யார்ப்பவார்ப்பப்
பாடக மெல்லடி யார்க்குமங்கை
பங்கின னெங்கள் பராபரனுக்
காடக மாமலை யன்னகோவுக்
காடப் பொற்சுண்ண மிடித்துநாமே! 7

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை யார்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
யாடப்பொற் சுண்ண மிடித்துநாமே! 8

வையக மெல்லா முரலதாக
மாமேரு வென்னு முலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொனு லக்கை வலக்கைபற்றி
ஐய னணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ண மிடித்துநாமே 9

முத்தணி கொங்கைக ளாடவாட
மொய்குழல் வண்டின மாடவாடச்
சித்தஞ் சிவனொடு மாடவாடச்
செங்கயற் கண்பனி யாடவாட
பித்தெம் பிரானொடு மாடவாடப்
பிறவி பிறரொடு மாடவாட
அத்தன் கருணையொ டாடவாட
ஆடப் பொற்சுண்ண மிடித்துநாமே! 10

மாடு நகைவா ணிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமி னந்தம்மை யாண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமி னெம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமி னம்பலத் தாடினுனுக்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே! 11

மையமர் கண்டனை வானநாடர்
மருந்ினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை யையர்பி ரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே! 12

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்களப்பன்
எம்பெரு மானிம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையனெம் மையன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே! 13

சங்க மரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை யிரைப்ப அராவிரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே! 14

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தைநந்தாத்
தேனைப் பழச்சுவை யாயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே! 1;

---

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோ
டாட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க ளுவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவக மேந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ண மிடித்துநாமே! 16

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரு மிம்பரு முய்யவன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே! 17

அயன்றலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்க னெயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலா லுதைத்தல்பாடி
இயைந்தன முப்புர மெய்தல்பாடி
ஏழை யடியோமை யாண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ண மிடித்துநாமே! 18

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் றில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடு மரவம்பாடி
ஈசற்குச் சுண்ண மிடித்துநாமே! 19

வேதமும் வேள்வியு மாயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையு மாயினார்க்குச்
சோதியு மாயிரு ளாயினார்க்குத்
துன்பமு மாயின்ப மாயினார்க்குப்
பாதியு மாய்முற்று மாயினார்க்குப்
பந்தமு மாய்வீடு மாயினாருக்
காதியு மந்தமு மாயினாருக்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே! 20

# திருச்சாழல்.

திருச்சிற்றம்பலம்.

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதுந் திருவாயால் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ.

## அன்னைப்பத்து

வேத மொழியர்வெண் ணீற்றர்செம் மேனியர்
நாதப் பறையினர் அன்னே என்னும்
நாதப் பறையினர் நான்முகன் மாலுக்கும்
நாதரிந் நாதனார் அன்னே என்னும்,

## குயிற்பத்து

கீத மினிய குயிலே கேட்டியேல் எங்கள் பெருமான்
பாத மிரண்டும் வினவில் பாதாளம் ஏழினுக் கப்பால்
சோதி மணிமுடி சொல்லிற் சொல்லிறந்து நின்ற [தொன்மை
ஆதிகுண மொன்று மில்லான் அந்த மிலான்வரக் கூவாய்.

### கோயில் மூத்த திருப்பதிகம்

உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள்
[நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்ப தானால் அடியேனுன்
அடியார் நடுவுள் இருக்கும் அரு ளைப்புரி யாய்பொன்
[னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்
[றே.

### அருட்பத்து

சோதியே சுடரே சூழொளி விளக்கே சுரிகுழற் பணைமுலை
[மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய் பங்கயத் தய
[னுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில் நிறைமலர்க் குருந்
[தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால் அதெந்துவே
[என்றரு ளாயே.

### குழைத்த பத்து

வேண்டத் தக்க தறிவோய்நீ வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற்கு அரியோய்நீ வேண்டி என்னைப்
[பணிகொண்டாய்
வேண்டி நீயாது அருள்செய் தாய் யானும் அதுவே வேண்
[டின் அல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில் அதுவும் உன்றன்
[விருப்பன்றே.

அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னைஆட் கொண்ட போதே கொண்
[டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ எண்டோள் முக்
[கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாய
[கமே.

### பிடித்த பத்து

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே அன்பினில் விளைந்தஆ
[ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும் புழுத்த
[லைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த செல்வமே சிவபெரு
[மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்
[தருளுவ தினியே.

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப் பரிந்துநீ பாவியே
[னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்த
[மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த செல்வமே சிவபெரு
[மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்
[தருளுவ தினியே.

### அச்சோப்பதிகம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

திருச்சிற்றம்பலம்.

# திருச்சிற்றம்பலக் கோவை.

திருச்சிற்றம்பலம்.

திருவளர் தாமரை சீர்வளர் காவிகள் ஈசர்தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள்கொண்
[டோங்குதெய்வ
மருவளர் மாலையொர் வல்லியி னொல்கி அனநடைவாய்ந்து
உருவளர் காமன்றன் வென்றிக் கொடிபோன் றொளிர்கின்
[றதே.

காரணி கற்பகங் கற்றவர் நற்றுணை பாணரொக்கல்
சீரணி சிந்தாமணியணி தில்லைச் சிவனடிக்குத்
தாரணி கொன்றையன் தக்கோர்தஞ் சங்க நிதிவிதிசேர்
வூருணி உற்றவர்க் கூரன்மற் றியாவர்க்கும் ஊதியமே.

திருச்சிற்றம்பலம்.

❁ ❁ ❁

## திருமாளிகைத் தேவர் முதலியோர் அருளிச்செய்த திருவிசைப்பா.

# ஒன்பதாந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக் கரையிலாக்
[கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை மதிப்பவர் மனமணி
[விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத் திருவீழி மிழலை
[வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம் குளிரஎன் கண்
[குளிர்ந்தனவே.

தனதனற் றோழா சங்கரா சூல பாணியே தாணுவே சிவனே
கனகநற் றூணே கற்பகக் கொழுந்தே கண்களோன்
[றுடையதோர் கரும்பே
அனகனே குமர விநாயக சனக அம்பலத் தமரசே கரனே
உனகழ லிணையென் நெஞ்சினுள் இனிதாத் தொண்ட
[னேனை நுகருமா நுகரே.

எம்பந்த வல்வினைநோய் தீர்த்திட்(டு) எமையாளுஞ்
சம்பந்தன் காழியர்கோன் தன்னையும்ஆட் கொண்டருளி
அம்புந்து கண்ணாளுந் தானும் அணி தில்லைச்
செம்பொன்செய் அம்பலமே சேர்ந்திருக்கை ஆயிற்றே.

ஏகநா யகனை இமையவர்க்கு அரசை
என்னுயிர்க்கு அமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வணற்(கு) அருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவின் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

திருச்சிற்றம்பலம்.

## சேந்தனார் அருளிச்செய்த

# திருப்பல்லாண்டு.

திருச்சிற்றம்பலம்.

மன்னுகதில்லை வளர்கநம் பத்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து புவனி யெல்
[லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன் அடியோ முக்கருள்
[புரிந்து
பின்னைப்பிறவி அறுக்க நெறிதந்த பித்தற்குப் பல்லாண்டு
[கூறுதுமே.

அன்பளிப்பு: ஸ்ரீ லங்கா அச்சகம்,

மீண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள் விரைந்து
[வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி ஈசற்காட் செய்மின்
[குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள்அள வில்லதோர் ஆனந்த வெள்
[ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள் என்றே பல்லா
[ண்டு கூறுதுமே.

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்த
[பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றுஅருள் செய்தவன் மன்னிய
[தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம் பலமே இடமாகப்
பாவித்து நட்டம் பயிலவல் லானுக்கே பல்லாண்டு கூறு
[துமே

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் அணியுடை ஆதிரை
[நாள்
நாராய ணனொடு நான்முகன் அங்கி இரவியும் இந்திர
[னும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள் திசையனைத்தும் நிறை
[ந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டு கூறு
[துமே.

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கிவ் வண்டத் தொடு
[முடனே
பூதலத் தோரும் வணங்கப் பொற்கோயிலும் போனகமும்
[அருளிச்
சோதி மணிமுடித் தாமமும் நாமமுந் தொண்டர்க்கு
[நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே பல்லாண்டு கூறு
[துமே.

திருச்சிற்றம்பலம்.

## திருமூலநாயனுர் அருளிச்செய்த
## திருமந்திரம்
# பத்தாந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சிவனொடொக் குந்தெய்வம் தேடினும் இல்லை
அவனொடொப் பார்இங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே.

அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானுர்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கங்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே.

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே.

ஒன்றுகண் டீர்உல குக்கொரு தெய்வமும்
ஒன்றுகண் டீர்உல குக்குயி ராவது
நன்றுகண் டீர்இனி நமச்சிவா யப்பழந்
தின்றுகண் டேற்கிது தித்தித்த வாறே.

பின்னைநின் றென்னே பிறவி பெறுவது
முன்னைநன் ருக முயல்தவஞ் செய்கிலர்
என்னைநன் ருக இறைவன் படைத்தனன்
தன்னைநன் ருகத் தமிழ்செய்யு மாறே.

---

அன்பளிப்பு: ஸ்ரீ லங்கா அச்சகம்,

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி பேணூர்
பெறுதற் கரிய பிராணிகள் எல்லாம்
பெறுதற் கரியதோர் பேறிழந் தாரே.

திருச்சிற்றம்பலம்.

## திருவாலவாயுடையார் முதலிய பன்னிருவர் அருளிச்செய்த பிரபந்தங்கள்

# பதிேனாராந் திருமுறை.

காரைக்காலம்மையார்- அற்புதத் திருவந்தாதி

திருச்சிற்றம்பலம்.

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்—நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர்.

இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரும் நெறிபணியா ரேனும்—சுடர்உருவில்
என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானார்க்கு
அன்பறா தென்னெஞ் சவர்க்கு.

அறிவானுந் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே—அறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்பார் ஆகாயம்
அப்பொருளுந் தானே அவன்.

அன்றுந் திருவுருவங் காணாதே ஆட்பட்டேன்
இன்றுந் திருவுருவங் காண்கிலேன்—என்றுந்தான்
எவ்வுருவோன் நும்பிரான் என்பார்கட் கென்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்உருவம் ஏது.

பட்டினத்தார் -கோயில் நான்மணிமாலை

நானே பிறந்து பயன்படைத் தேன்அயன் நாரணன்எம்
கோனே எனத்தில்லை அம்பலத் தேநின்று கூத்துகந்த
தேனே திருவுள்ள மாகிஎன் தீமைஎல் லாம்அறுத்துத்
தானே புகுந்தடி யேன்மனத் தேவந்து சந்திக்கவே.

வினைப்போக மேயொரு தேகங்கண் டாய்வினை தானொழிந்
[தால்
தினைப்போ தளவுநில் லாதுகண் டாய்சிவன் பாதநினை
நினைப்போரை மேவு நினையாரை நீங்கிந் நெறியினின்றால்
உனைப்போ லொருவருண் டோமன மேஎனக் குற்றவரே.

ஐயுந் தொடர்ந்து விழியுஞ் செருகி அறிவழிந்து
மெய்யும்பொய் யாகி விடுகின்ற போதொன்று வேண்டு
[வன்யான்
செய்யுந் திருவொற்றி யூருடை யீர்திரு நீறுமிட்டுக்
கையுந் தொழப்பண்ணி ஐந்தெழுத் தோதவுங் கற்பியுமே.

திருச்சிற்றம்பலம்.

சேக்கிழார் அருளிச்செய்த
திருத்தொண்டர் புராணம்
# பன்னிரண்டாந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்,

உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் [ஆகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணு மாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி.

கற்பனை கடந்த சோதி கருணையே உருவ மாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ மழை [சொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான் வீதிவிடங் கப்பெருமான்.

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
"பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல் உன்னை [என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டுநான் மகிழ்ந்து [பாடி
அறவாநீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க" என்றார்.

சென்றகா லத்தின் பழுதிலாத் திறமும்
இனிஎதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்றபே றிதனால்
எற்றைக்குந் திருவரு ளுடையேம்;
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்
நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற் றொளியினில் விளங்கும்
மேன்மையும் படைத்தனம் என்பார்.

மற்றுநீ வன்மை பேசி வன்றொண்டன் என்னும் நாமம்
பெற்றனை; நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே ஆகும்; ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடுக என்றார் தூமறை பாடும் வாயார்.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

திருச்சிற்றம்பலம்.

# திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

## தேவாரம்

# திருநீற்றுப்பதிகம்.

**திருவாலவாய்** **பண்- காந்தாரம்**

திருச்சிற்றம்பலம்.

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே.

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே.

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே.

---

காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயான் திருநீறே.

பூச வினியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் திருநீறே.

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்த மதாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே.

எயிலது அட்டது நீறு இருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தால வாயான் திருநீறே.

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி யால வாயான் திருநீறே.

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்க டங்கண் மெய்யது வெண்பொடி நீறு
ஏல வுடம்பிடர் தீர்க்கும் இன்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் மால வாயான் திருநீறே.

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத வினியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளார் ஏத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்தும் ஆல வாயான் திருநீறே.

ஆற்ற லடல்விடை யேறும் ஆலவா யான்றிரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

திருச்சிற்றம்பலம்.

இத்திருநீற்றுப் பதிகத்தினலே நாடோறும் நியமமாக அன்போடு விபூதி அபிமந்திரித்துத் தரித்துக் கொண்டுவந்தால், சுரமுதலிய நோய்களும், பேய் பூதங்களால் விளையும் பல துன்பங்களும், கவலைகளும், பாவங்களும் நீங்கும்;

உ

சிவமயம்

# கோளறு திருப்பதிகம்

பொது — பண்- பியந்தைக் காந்தாரம்

திருச்சிற்றம்பலம்.

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமே லணிந்தெ
னுளமேபு குந்த வதனல்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல வவை நல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே.

என்பொடு கொம்பொ டாமை யிவைமார்பி லங்க
எருதேறி யேழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தெ
னுளமே புகுந்த வதனு

லொன்பதொ டொன்ரு டேழு பதினெட் டொடாறு
முடனாய நாள்க ளவைதா
மன்பொடு நல்லநல்ல வவைநல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே.

உருவளர் பவளமேனி யொளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசைதெய்வ மான பலவு
மருநெதி நல்லநல்ல வவைநல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே.

மதிநுதன் மங்கையோடு வடபா லிருந்து
மறையோது மெங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவு
மதிகுண நல்லநல்ல வவைநல்ல நல்ல
வடியார வர்க்கு மிகவே.

நஞ்சணி கண்டனெந்தை மடவாட னோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
வெஞ்சின வவுணரோடு முருமிடியு மின்னும்
மிகையான பூத மவையு
மஞ்சிடு நல்லநல்ல வவைநல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே.

வாள்வரி யதளதாடை வரிகோ வணத்தர்
மடவாட னோடு முடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தெ
னுளமே புகுந்தவ தனால்

கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல வவைநல்ல நல்ல
வடியார வர்க்கு மிகவே.

செப்பிள முலைநன்மங்கை யொருபாக மாக
விடையேறு செல்வ னடைவா
ரொப்பிள மதியுமப்பு முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த வதனல்
வெப்பொடு குளிரும்வாத மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல வவைநல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே.

வேள்பட விழிசெய்தன்று விடைமே லிருந்து
மடவாட னேடு முடனய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தெ
னுளமே புகுந்த வதனல்
ஏழ்கடல் சூழிலங்கை யரையன் றனேடு
மிடரான வந்து நலியா
ஆழ்கட னல்லநல்ல வவைநல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே.

பலபல வேடமாகும் பரனரி பாகன்
பசுவேறு மெங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த வதனல்
மலர்மிசை யோனுமாலு மறையோடு தேவர்
வருகால மான பலவு
மலைகடல் மேருநல்ல வவைநல்ல நல்ல
வடியார வர்க்கு மிகவே,

கொத்தலர் குழலியோடு விசயற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியுநாக முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த வதனற்

புத்தரொ டமணைவாதி லழிவிக்கு மண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல வவைநல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே.

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொ னெங்கு நிகழ
நான்முக னாதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளுநாளு மடியாரை வந்து
நலியாத வண்ண முரைசெய்
ஆனசொன் மாலையோது மடியார்கள் வானில்
அரசாள்வ ராணை நமதே.

இக்கோளறு பதிகத்தை நாடோறும் நியமமாக அன்புடன் ஓதிக்கொண்டு வந்தால், கிரகபீடை நோய், இராசபயம், சோரபயம், சத்துருபயம், மிருகபயம், பூதபிசாசுபயம் முதலியன எல்லாம் நீங்கும். யாத்திரையில் இதனை ஓதினால் சகல விக்கினமும் நீங்கிப் பயன்கள் எல்லாம் சித்திக்கும்.

திருச்சிற்றம்பலம்.

உ



## ஔவையார் அருளிச் செய்த

# விநாயகர் அகவல்,

திருச்சிற்றம்பலம்

*சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்அரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்*

*இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன!
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து*

அன்பளிப்பு; ஸ்ரீ லங்கா அச்சகம்,

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திரமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்குங் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை யறுத்திருள் கடிந்து

தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறு தாரத் தங்கிசை நிலையும்
பேறு நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையி னெழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி யதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக் கருளி
என்னை அறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்தன் சிந்தை தெளிவித்
திருள்வெளி யிரண்டுக் கொன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத் தழுத்திஎன் செவியில்

எல்லை யில்லா ஆனந்த மளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்

தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக! விநாயக! விரைகழல் சரணே.

திருச்சிற்றம்பலம்.

அன்பளிப்பு: 'ஸ்ரீ லங்கா அச்சகம்,

# தெய்வத் திருமுன் பாடுந் தோத்திரம்

## விநாயகக்கடவுள்

### தேவாரம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

### புராணம்

திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

## சிவபெருமான்

### தேவாரம்

அங்கத்தை மண்ணுக் காக்கி ஆர்வத்தை உனக்கே தந்து
பங்கத்தைப் போக மாற்றிப் பாவித்தேன் பரமா நின்னைச்
சங்கொத்த மேனிச் செல்வா சாதல்நாள் நாயேன் உன்னை
எங்குற்றாய் என்ற போதா விங்குற்றேன் என்கண் டாயே.

### புராணம்

நன்மைபெருகு அருள்நெறியே வந்தணைந்து நல்லூரின்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கிமகிழ்ந் தெழும் [பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர்தஞ்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்.

## உமை அம்பிகை

### தேவாரம்

உண்ணுமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே.

### புராணம்

சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி உத்தரியத்
[தொடித்தோள் போற்றி.
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப் பால்சுரந்த
[கலசம் போற்றி
இரும்புமனங் குழைத்தென்னை எடுத்தாண்ட அங்கயற்க
[ணெம்பி ராட்டி
அரும்புமிள நகைபோற்றி ஆரணநூ புரஞ்சிலம்பும் அடிகள்
[போற்றி

## சபாபதி

### தேவாரம்

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன் மேனியிற் பால்வெண்ணீ
[றும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே.

### புராணம்

சீராருஞ் சதுர்மறையுந் தில்லைவா ழந்தணரும்
பாராரும் புலிமுனியும் பதஞ்சலியுந் தொழுதேத்த
வாராருங் கடல்புடைசூழ் வையமெலா மீடேற
ஏராரு மணிமன்றுள் எடுத்ததிரு வடிபோற்றி.

---

அன்பளிப்பு; ஸ்ரீ லங்கா அச்சகம்.

## சிவகாமியம்மை

### தேவாரம்

காரு லாமலர்க் கொன்றையந் தாரனை
வாரு லாமுலை மங்கை மணாளனைத்
தேரு லாவிய தில்லையுட் கூத்தனை
ஆர்கி லாஅமு தைமறந் துய்வனே.

### புராணம்

பரந்தெழுந்த சமண்முதலாம் பரசமய இருள்நீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றின் ஒளிவிளங்க
அரந்தைகெடப் புகலியர்கோன் அமுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரிபூங் கழல்போற்றி.

## சுப்பிரமணியக் கடவுள்

### தேவாரம்

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்அடி யேனையும் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே.

### புராணம்

பன்னிரு கரத்தாய் போற்றி பசும்பொன்மா மயிலாய்
[போற்றி
முன்னிய கருணை யாறு முகப்பரம் பொருளே போற்றி
கன்னியர் இருவர் நீங்காக் கருணை வாரிதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணுள் இருக்குமா மணியே போற்றி.

# திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
    ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுகம் ஒன்றே
    குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுகம் ஒன்றே
    வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
    ஆதியரு ணசலம் அமர்ந்தபெரு மாளே.

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

இசைந்த ஏறும் கரியுரி போர்வையும் எழில்நீறும்
    இலங்கு நூலும் புலியத ளாடையு மழுமானும்
அசைந்த தோடும் சிரமணி மாலையு முடிமீதே
    அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
    உகந்த பாசக் கயிறொடு தூறுவர் நலியாதே.
அசைந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
    அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே.

பத்தியாக் யானுனைப் பலகாலும்
    பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனு மாறெனைப் பெருவாழ்வின்
    முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தானசந் குணர்நேயா
    ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
    வெற்றிவே லாயுதப் பெருமாளே.

---

எதிரி வாத பக்தி தனைமேவி
　　இனிய தாள்நி னைப்பை யிருபோதும்
இதய வாரி திக்குள் உறவாகி
　　எனது ளேசி றக்க அருள்வாயே
கதிர காம வெற்பி லுறைவோனே
　　கனக மேரு ஒத்த புயவீரா
மதுர வாணி யுற்ற கழலோனே
　　வழுதி கூன்நி மிர்த்த பெருமாளே.

சந்ததம் பந்தத் தொடராலே
　　சஞ்சலந் துஞ்சித் திரியாதே
கந்தனென் றென்னுற் றுனைநாளும்
　　கண்டுகொண் டன்புற் றிடுவேனோ
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
　　சங்கரன் பங்கிற் சிவைபாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
　　தென்பரங் குன்றிற் பெருமாளே.

## வைரவக்கடவுள்

### தேவாரம்

விரித்தபல் கதிர்கொள் சூலம் வெடிபடு தரும கங்கை
தரித்ததோர் கோல கால பயிரவ னாகி வேழம்
உரித்துமை அஞ்சக் கண்டு ஒண்திரு மணிவாய் விள்ளச்
சிரித்தருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வ னாரே.

### புராணம்

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்
குருதியும் அகந்தையுங் கொண்டு தண்டமும்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

வெஞ்சினப் பரிஅழல் மீது போர்த்திடும்
அஞ்சனப் புகையென ஆல மாமெனச்
செஞ்சுடப் படிவமேற் செறித்த மாமணிக்
கஞ்சுகக் கடவுள்பொற் கழல்கள் ஏத்துவாம்.

## ஐயனர்

### தேவாரம்

**அப்பர்**

பார்த்தனுக் கருளும் வைத்தார் பாம்பரை யாட வைத்தார்
சாத்தனை மகனு வைத்தார் சாமுண்டி சாம வேதம்
கூத்தொடும் பாட வைத்தார் கோளரா மதியம் நல்ல
தீர்த்தமுஞ் சடையில் வைத்தார் திருப்பயற் றூர ஞரே.

### புராணம்

பையரா அமளி யானும் பரம்பொருள் முதலு நல்கும்
ஐயனே யோலம்;விண்ணோர்க் காதியே யோலஞ் செண்டார்
கையனே யோல மெங்கள் கடவுளே யோல மெய்யர்
மெய்யனே யோலம் தொல்சீர் வீரனே ஓலம் ஓலம்.

ஆரணச் சுருதி ஓர்சார் அடலுருத் திரனென் றேத்துங்
காரணக் கடவுள் ஓலம்; கடல்நிறத் தெந்தாய் ஓலம்
பூரணைக் கிறைவா ஓலம்; புட்கலை கணவா ஓலம்;
வாரணத் திறைமேற் கொண்டு வரும்பிரான் ஓலம் என்ருள்;

## சண்டேசுரர்

### தேவாரம்

**திருஞானசம்பந்தர்** **திருநேரிசை**

தழைத்ததோர் ஆத்தி யின்கீழ்த் தாபர மணலாற் கூப்பி
அழைத்தங்கே ஆவின் பாலைக்' கறந்துகொண் டாட்டக்
[கண்டு
பிழைத்ததன் தாதை தாளைப் பெருங்கொடு மழுவால் வீசக்
குழைத்ததோர் அமுத மீந்தார் குறுக்கைவீ ரட்ட ஞரே.

புராணம்

பொன்னங் கடுக்கை முடிவேய்ந்த புனிதற் கமைக்கும் பொரு
[ளன்றி
மின்னுங் கலனு டைகள்பிறவும் வேறு தனக்கென் றமை
[யாமே
மன்னுந் தலைவன் பூசனையின் மல்கும் பயனை அடியார்கள்
துன்னும் படிபூ சனைகொள்ளுந் தூயோ னடித்தா மரை
[தொழுவாம்.

## பிராயச்சித்தார்த்தம்

கல்லாப் பிழையுங் கருதாப் பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையு நினையாப் பிழையுநின் னஞ் செழுத்தைச்
சொல்லாப் பிழையுந் துதியாப் பிழையுந் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி ஏகம்பனே.

அருள்மிகு வைரவக்கடவுள் தேவாரம்

## தோத்திரப்பாடல்கள்

எளியரை வலியர் வாட்டின் வலியரை இருநீர் வைப்பின்
அளியறத் தெய்வம் வாட்டு மெனுமுரைக் கமைய
[வன்றே
தெளியுமா வலியைச் செற்றேற் செகுத்துரிக் கவயம்
[போர்த்த
வளியுளர் கச்சி காவல் வயிரவர்க் கன்பு செய்வாம்.
[காஞ்சிப்புராணம்

சென்றன னெதிரா நின்றே ராணவச் செருக்கில் நிற்கு
மன்றலந் துளவி னற்கு மாமயக் கொழிய நேரா
வின்றியல் பிறவுஞ் சொன்ன னஃதவன் சிறிது மெண்ணான்
கன்றிய வெகுளி மிக்கான் வயிரவக் கடவுட் செல்வன்.

பற்றினன் வயிரத் தண்டம் பகிரண்ட மதிர வோச்சிச்
சுற்றினன் உருமுக் காலத் தெழித்தனன் துளவ மார்பின்
எற்றினன் எற்ற லோடும் எறிபடு சண்ட வாயு
முற்றுற இற்று வீழும் முரிவெங் கிரியிற் சாய்ந்தான்

கருநிறக் கமஞ்சூன் மேகக் காரதள் உரித்து வாங்கித்
திருநிறத் தமையக் காள கஞ்சுக மென்னச் சேர்த்தி
வெரிநுறப் பிடுங்கு மென்பு தண்டென விடுத்துக் கொண்
[டான்
மருமலர்த் துளவ மாயோ னணவ மயக்கந் தீர்ந்தான்.
— உபதேசகாண்டம்.

எகினம துயர்த்த அண்ணல் இரும்பவந் தொலைப்ப ஏனைப்
பகவர்த மகந்தை மாற்றப் பண்ணவர் மதர்ப்புஞ் சிந்த
மிகுபெருங் கருணை தன்னல் வேதநா யகனுள் ளத்து
மகிழ்வொடு புரிந்தா னென்ப வயிரவக் கடவுள் தன்னை.

நீலுறு சுடரின் மெய்யு நெகிழிகள் அரற்றுந் தாளும்
ஆலம துயிர்க்குஞ் செங்கே ழரவவெற் றரையுஞ் சென்னி
மாலைகள் அநந்த கோடி வயின்வயின் பெயரு மார்புஞ்
சூலமும் பரசு நாணுந் துடியுமேந் தியபொற் றேளும்.

முக்கணுந் திங்க ளேபோல் முளைத்தவாள் எயிறும் வன்னிச்
செக்கரஞ் சடையின் சீருஞ் செயிர்கெழு நகையு மாக
உக்கிர வடிவு கொண்டாங் குதித்திடு வடுகன் தன்னை
மைக்கிளர் கண்டத் தெந்தை நோக்கியே வகுத்துச் சொல்
[வான்

திகழ்ந்தநஞ் சிறுவ னாகுஞ் செங்கம லத்தோன் சென்னி
இகழ்ந்தது நம்மை உச்சி இருந்ததே யதனை வல்லே
அகழ்ந்தனை கரத்தி லேந்தி அவனுயிர் நல்கித் தம்மைப்
புகழ்ந்திடு முனிவர் தேவர் புரந்தொறும் போதி யன்றே,

போந்தனை அனையர் தங்கள் புலவுடற் சோரி தானே
வாய்ந்ததோ ரைய மாக வாங்குதி வாங்கும் வேலை
வீய்ந்தவர் தமக்கு மீட்டும் வியனுயிர் உதவி யன்னோர்
ஆய்ந்திடும் அகந்தை மாற்றி அண்டமேல் அடைதி யம்மா,

பொறியுறும் உயிர்களும் புவனம் யாவையும்
இறுதியாய் அழிவுறும் ஈமத் தெல்லையின்
மறையெனு ஞானியை உயர்த்து மற்றவன்
உறுவதோர் மகிழ்ச்சியால் உலவு மென்பவே,

கந்தபு. உத்தரப் படலம்;

நடந்து வயிரவன் சூல கபாலி
கடந்த பகைவனைக் கண்ணது போக்கித்
தொடர்ந்த உயிரது உண்ணும் பொழுது
படர்ந்த உடல்கொடு பந்தாட லாமே.

ஆமேவப் பூண்டருள் ஆதி வயிரவன்
ஆமே கபாலமுஞ் சூலமுங் கைக்கொண்டங்(கு)
ஆமே தமருக பாசமுங் கையது
ஆமே சிரத்தொடு வாளது கையே.

கையவை யாறுங் கருத்துற நோக்கிடும்
மெய்யது செம்மை விளங்கு வயிரவன்
துய்யர் உளத்தில் துளங்குமெய் யுற்றதாய்ப்
பொய்வகை விட்டு நீ பூசனை செய்யே.

பூசனை செய்யப் பொருந்தியோ ராயிரம்
பூசனை செய்யு மதுவுட னுடுமால்
பூசனை சாந்து சவாது புழுகுநெய்
பூசனை செய்து நீர் பூசலை வேண்டுமே.

திருமந்திரம் வயிரவச்சக்கரம்

# திருமால்

## திவ்வியப் பிரபந்தப் பாடல்கள்

பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகரு ளானே.

[திருமாலை

குலந்தரும் செல்வந் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.

[பெரியதிருமொழி

மாலேய் நோக்கி மடவாளை மார்பிற் கொண்டாய்
[மாதவா
கூனே சிதைய உண்டைவில் நிறத்தில் தெறித்தாய்
[கோவிந்தா
வானார் சோதி மணிவண்ணா மதுசூ தாநீ அருளாயுன்
தேனே மலருந் திருப்பாதஞ் சேரு மாறு வினையேனே.

ஆயர் கொழுந்தாய் அவரால் புடையுண்ணும்
மாயப் பிரானையென் மாணிக்கச் சோதியைத்
தூய அமுதைப் பருகிப் பருகியென்
மாயப் பிறவி மயர்வறுத் தேனே.

[திருவாய்மொழி



# சகல கலாவல்லி மாலை.

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலா வல்லியே. 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடும் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே. 2

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்
கொலோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழைசிந் தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலா வல்லியே. 3

234ஏ, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தூக்கும் பனுவல் துறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே. 4

பஞ்சப்பி தந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவுமக மும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலா வல்லியே. 5

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலுமியான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே. 6

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ் தீம் பாலமு
தந்தெளிக்கும் வண்ணங்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலா வல்லியே. 7

சொல்விற் பனமு மவதான
        முங்கவி சொல்லவல்ல
நல்வித் தையுந்தந்தடிமைகொள்
        வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
        முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ் செல்வப்பேறே
        சகல கலா வல்லியே. 8

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
        ஞானத்தின் தோற்ற மென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
        யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்ச ரத்தின் பிடியோ
        டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
        சகல கலா வல்லியே. 9

மண்கண்ட வெண்குடைக் கீழாக
        மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
        வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
        டேனும் விளம் பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
        சகல கலா வல்லியே. 10

ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள்:

அருள்மிகு அபிராமிப்பட்டர் அருளிய

## அபிராமி அந்தாதி

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே.

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை
என்றும் வணங்குவ துன்மலர்த் தாள்எழு தாமறையின்.
ஒன்றும் அரும்பொருளே அருளே உமையே இமயத்து
அன்றும் பிறந்தவளே அழி யாமுத்தி ஆனந்தமே.

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின்கரந்தவளே கறைக்கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே
மாத்தவளே உன்னை அன்றி மற்றோர் தெய்வம் வந்திப்
[பதே.

தனந்தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வவடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம்தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

ஆத்தாளை எங்கள் அபிராமவல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூ நிறத்தாளைப் புவி அடங்கக்
காத்தாளை அங்குச பாசம் குசுமம் கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கில்
[லையே.

# அபிராமி அம்மை பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணியிலாத உடலும்
சலியாத மனமும் அன் பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்

தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
    துன்பமில் லாத வாழ்வும்
துய்ய நின் பாதத்தில் அன்பும்உத விப்பெரிய
    தொண்டரொடு கூட்டு கண்டாய்;
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே!
    ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
    அருள்வாமி! அபிராமியே!

## திருமந்திரம் — திருமூலர்

## ஏடுதொடக்கலுக்கு முக்கியமானது

ஏடங்கை நங்கை இறையெங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்பும் வெண்டாமரை
பாடும் திருமுறை பார்ப்பனி பாதங்கள்
சூடுமின் சென்னிவாய் தோத்திரம் சொல்லுமே.

## கொடியேற்ற நவசந்திப் பண்ணிசைப்பாக்கள்

## (துவஜாரோகணம்)

### கொடிஸ்தம்பம்

பாடியவர்:சம்பந்தர் — பண்- தக்கராகம்

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கை கோலக் காவுளான்
சடையும் பிறையும் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட உருவ மென்கொலோ.

### கொடிமரத்தடியில்

பாடியவர்: சம்பந்தர் — பண்- இந்தளம்

சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவாவிழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவளுண் மெலிவே.

கோபுரவாசல் பண்=மேகராகக்குறிஞ்சி

லனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி யறிவழிந்திட்டு
[ஐம்மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென் றருள்செய்வா னமருங்
[கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழையென்
[றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி முகில்பார்க்குந் திருவை
[யாறே

## இந்திரதிசை

பண்– காந்தாரபஞ்சமம் பாடியவர்: அப்பர்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

## அக்கினிதிசை

பண்– கொல்லி பாடியவர்: அப்பர்

கூற்றாயி னவாறு விலக்ககிலீர் கொடுமைபல செய்தன
[நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும் பிரியாது வணங்குவ னெப்
[பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகப்படியே குடரோடு தொடக்கி
[முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில வீரட்டான த்துறையம்
[மானே.

அன்பளிப்பு ஸ்ரீ லங்கா அச்சகம்

## யமன்திசை

பண்– கௌசிகம் பாடியவர்: சம்பந்தர்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## நிருதிதிசை

பண்- நட்டபாடை பாடியவர்: சம்பந்தர்

தோடுடைய செவியன்விடையேறியோர் தூவெண் மதி [சூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசிஎன் உள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான்முனை நாட்பணிந் தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமா புரமேவிய பெம்மா னிவனன்றே.

## வருணன்திசை

பண்: சீகாமரம் பாடியவர்: சம்பந்தர்

கண்காட்டு நுதலானுங் கனல்காட்டுங் கையானும்
பெண்காட்டு முருவானும் பிறைகாட்டுஞ் சடையானும்
பண்காட்டும் இசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டி லுறைவானும் விடைகாட்டுங் கொடியானே.

---

## வாயுதிசை

பண்- தக்கேசி; பாடியவர்: சம்பந்தர்

பூவார் மலர்கொண் டடியார் தொழுவார் புகழ்வார் [வானோர்கள்
மூவார் புரங்கள் எரித்த வன்று மூவர்க் கருள்செய்தார்
தூமா மழைநின் றதிர வெருவித் தொறுவின் னிரையோடும்
ஆமாம் பிணைவந் தணையுஞ்சாரல் அண்ணு மலையாரே.

## குபேரன்திசை

பண்-தக்கராகம் பாடியவர்: அப்பர்

அடுத்தானை யுரித்தானை
அருச்சுனற்குப் பாசுபதம்
கொடுத்தானைக் குலவரையே
சிலையாகக் கூரம்பு
தொடுத்தானைப் புரமெ ரியச்
சுனைமல்கு கயிலாயம்
எடுத்தானைத் தடுத்தானை
என்மனத்தே வைத்தேனே.

## ஈசானதிசை

பண் - சாலாபாணி (சாதாரி) பாடியவர்: அப்பர்

தலையே நீ வணங்காய் தலைமாலை தலைக்கணிந்து
தலையாலே பலி தேரும் தலைவனைத் தலையே நீவணங்காய்.

---

அன்பளிப்பு: ஸ்ரீ லங்கா அச்சகம்.

## மங்களம்

அப்பனுக்கும் அம்மைக்கும் மங்களம்
அத்துவித வஸ்துவுக்கு மங்களம்
ஒப்பில்குரு நாதனுக்கு மங்களம்
உத்தம பத்தருக்கு மங்களம்
முப்பொழுதும் தொழுவார்க்கு மங்களம்
மூவாசை வென்றவர்க்கு மங்களம்
முப்பத்து முக்கோடி தேவர்க்கு மங்களம்
முனிவர்க்கும் இருடிகட்கும் மங்களம்
தன்னைத் தன்னு லறிந்தவர்க்கு மங்களம்
ஐயமிட் டுண்பவர்க்கு மங்களம்
ஐயமில்லாச் சாதுக்கட்கு மங்களம்
ஆதியந்த மில்லாத ஆன்மாவுக்கு மங்களம்
சீர்காழித் தேவருக்கு மங்களம்
திருநாவுக் கரசருக்கு மங்களம்
சீர்பெருகு சுந்தரர்க்கு மங்களம்
திவ்விய மாணிக்கர்க்கு மங்களம்
எங்குந்தங்கும் உயிர்களுக்கு மங்களம்

மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்

—நற்சிந்தனை

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்.

## விநாயகர் நாமாவளி

ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

ஜயகணேச ஜயகணேச ஜயகணேச பாஹிமாம்
ஸ்ரீகணேச ஸ்ரீகணேச ஸ்ரீகணேச ரட்சமாம்
[ஜயகணேச 1

கணநாதம் கணநாதம் ஈஸ்வர புத்ரம் கணநாதம்
விக்னவிநாயக கணநாதம் சித்திவிநாயக கணநாதம்
பார்வதிபுத்திரம் கணநாதம் முத்திப் பிரதாயக கணநாதம்
மூஷிகவாகன கணநாதம் மோதக ஹஸ்த கணநாதம்
சாமர கர்ண கணநாதம் விளம்பித சூஸ்திர கணநாதம்
வாமனரூப கணநாதம் மகேஸ்வர புத்திர கணநாதம்
[கணநாதம் 2

சிவசிவ கஜமுக கணநாதா சிவகண வந்திதகுண நீதா
வா வா வா வா அங்குசபாசா வந்தருளின்பந் தந்திடுநேசா
உமைதருபாலா குருமணியே உந்தன டைக்கலம் அடியோமே
மகாகணபதே குருசரணம் மனம்மகிழ்ந்து வந்தருள் சரணம்
சரணம் சரணம் தந்திமுகா சரவண பவனுக் குயர் துணைவா
[சிவசிவ 3

## வைரவர் நாமாவளி

ஓம் வைரவ ஓம் வைரவ ஓம் வைரவ ஓம்
ஓம் வைரவ ஓம் வைரவ ஓம் வைரவ ஓம்
பரமஞான வைரவா ஓம் வைரவ ஓம்
பக்தர்களின் இரட்சகா ஓம் வைரவ ஓம்
அரிமருக பாலனே ஓம்வைரவ ஓம்
அடியவர்க் கெளியவா ஓம் வைரவ ஓம்
தருணமா மழையென ஓம் வைரவ ஓம்

---

சஞ்சலம் தவிர்க்கவா ஓம் வைரவா ஓம்
எதிரிலாத தலைவனே ஓம் வைரவ ஓம்
இணையிலாத அழகனே ஓம் வைரவ ஓம்
ஓம் வைரவ ஓம் வைரவ ஓம் வைரவ ஓம்
ஓம் வைரவ ஓம் வைரவ ஓம் வைரவ ஓம்
வடுகாய நம ஓம் வடுகாய நமக
வடுகாய நம ஓம் வடுகாய நமக
வடுகாய நம ஓம் வடுகாய நமக
வடுகாய வடுகாய வடுகாய நம ஓம்
வடுகாய வடுகாய வடுகாய நம ஓம்
வடுகாய வடுகாய வடுகாய நம ஓம்
வடுகாய நம ஓம் வடுகாய நமக
வடுகாய நமக வடுகாய நம ஓம்
வடுகாய நமக வடுகாய நம ஓம்
வடுகாய நம ஓம் வடுகாய நமக.

## சிவ நாமாவளி

சிவாய நம: ஓம் சிவாய நம:
சிவாய நம: ஓம் நம: சிவாய
சிவாய நம: ஓம் சிவாய நம:
சிவாய நம: ஓம் நம: சிவாய

சிவ சிவ சிவ சிவ சிவாய நம: ஓம்
ஹர ஹர ஹர ஹர ஹராய நம: ஓம்
ஓம் நம: சிவாய– ஓம் நம: சிவாய
ஓம் நம: சிவாய – சிவாய நம: ஓம்
ஓம் நம: சிவாய ஓம் நம: சிவாய
ஓம் நம: சிவாய நம: சிவாய- சிவாய நம:

நடராசா நடராசா
நர்த்தன சுந்தர நடராசா
நடராசா நடராசா
சிதம்பரேசா நடராசா
நடராசா நடராசா
சிற்சபேசா நடராசா
நடராசா நடராசா
கனக சபேசா நடராசா
நடராசா நடராசா
தில்லைத் தாண்டவ நடராசா
நடராசா நடராசா
ஆனந்தத் தாண்டவ நடராசா
நடராசா நடராசா
அற்புதத் தாண்டவ நடராசா.

## சக்தி நாமாவளி

தொண்டர் நாதன் துணைவி பராசக்தி
கண்ட கண்கள் களிக்கு மனோன்மணி
கொண்ட நெஞ்சம் குளிரு மருட்சிவை
வண்டு வார்குழல் அம்மையை வணங்குவாம்.

அம்மா பரமேஸ்வரி அகிலாண் டேஸ்வரி
ஆதி பராசக்தி பாலயமாம்
அம்பா பரமேஸ்வரி ஸ்ரீ புவனேஸ்வரி
ஸ்ரீ லலி தேஸ்வரி பாலயமாம்
அம்பா பரமேஸ்வரி ராஜ ராஜேஸ்வரி
ஆனந்த ரூபிணி ஆண்டருள்வாய்
ஆண்டருள்வாய் அம்மா ஆண்டருள்வாய்
ஆதி பராசக்தி ஆண்டருள்வாய்.
ஓம் சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்
ஓம் ஆதிபராசக்தி ஓம்
ஓம் மாதா ஓம் மாதா
ஸ்ரீ மாதா ஜெயஜெகன் மாதா
ஓம் மாதா ஓம் மாதா
ஸ்ரீ மாதா ஜெய லலிதாம்பா.

அன்பளிப்பு: ஸ்ரீ லங்கா அச்சகம்.

# முருகன் நாமாவளி

இராகம்-தேசிகதோடி தாளம்-ஆதி

கந்தா கடம்பா கார்த்திகேயா!
கலியுக வரதா கதிர்காமா! [கந்தா

தேவர்கள் துயர்தனை நீக்கிடவே
திருஅவ தாரம் செய்தாயே
சங்கரன் மைந்தனாய் வந்துதித்தே
சரவணப் பொய்கையில் வாழ்ந்தாயே! [கந்தா

சூர பத்மனை ஸம்ஹரித்த
வீரா தீரா வெற்றிவேலா!
வள்ளிப் பெண்ணைத் தினைப்புனத்தில்
கொள்ளை கொண்ட கள்வனாய்! [கந்தா

அருண கிரியுன் சரணெனவே
கருணை யுடனே ஆண்டுவந்தாய்!
நக்கீரனுக்கு அருள் புரிந்தே
பக்தி யோடுனைப் பாடவைத்தாய்! [கந்தா

முருகா முருகா என்றிடவே
முருக னாய்வந் தருள்புரிவாய்!
கதிர்கா மந்தனில் எழுந்தருளி
காந்தம் போலே கவருகின்றாய்! [கந்தா

முருகா! முருகா! முருகா! முருகா!
முருகா! முருகா! முருகா! முருகா!
முருகா! முருகா! முருகா! முருகா!
முருகா! முருகா! முருகா! முருகா!

கதிநீ மதிநீ கதிர்வேல் முருகா
துதிசெய் அடியார் துணைநீ அரசே
விதிசெய் வினையும் விலகப் புரிவாய்
புதிதா கியவாழ் வருள்புங் கவனே! [முருகா

சக்திக் கனலே சமர்செய் பகையைக்
குத்திக் குழறும் கொதிவேற் கரனே
தொத்தித் தொடருந் துயரங் களைவாய்
பக்தர்க் கருளும் பரமன் மகனே! [முருகா

அருளார் முகமும் அடியார்க் கபயம்
தருபொற் கரமும் தணலார் விழியும்
கருணை பொழியக் கனிவாய் நகையும்
திருமார் பழகுந் திகழும் முருகா! [முருகா

அன்பர்க் கெளிதாய் தருவாய் அபயம்
நம்பன் உமைநா தன்அருட் கனலே
உன்பா தம்உளத் தினில்ஊன் றிடவே
என்பால் குருவாய் வருவாய் இறைவா [முருகா

இரவும் பகலும் இதயத் துணையே
பரவும் அறிவும் பணியுந் தருவாய்
புரியுந் தொழில்யா வையும்பூ சனையாய்ப்
புரியும் படிசெய் டரிபூ ரணனே!

ஜய சிவ முருகா! ஜய சிவ முருகா!
ஜய சிவ முருகா! ஜய சிவ முருகா!
மங்கள மான மலர்வனச் சோலை
தங்கிடு முருகா செங்கதிர் முருகா [ஜய

பூந்திரு அழகிற் பொலிந்திடும் முருகா
தீந்தமிழ் எனவே தித்திக்கும் முருகா! [ஜய

மாணிக்கக் கங்கை வளமெனப் பெருகி
காணக் கண்குளிரும் காருண்ய முருகா! [ஜய

துன்பத்தைத் துரத்தி துயர்களை விலக்கி
அன்பரைக் காப்பாய் அருட்பெரு முருகா! [ஜய

முத்து முத்தாகச் சித்தர்கள் சூட்டும்
முத்தமிழ் மாலை மொய்த்த பொன்னழகா! [ஜய

முப்பொரு ளுண்மை மொழிந்திடும் முருகா
எப்பொரு ளுக்கும் உட்பொரு ளாவாய்! [ஜய

குமரா குழகா குருவே முருகா
அமரா அழகா அருளே முருகா! [ஜய

---

அன்பளிப்பு: ஸ்ரீ லங்கா அச்சகம்.

திருக்கோயிற் கொடியேற்றுத் திருவிழாவிற் பாடப்படும்

## கொடிக்கவி

### கட்டளைக் கலித்துறை

ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம்ஒன்று மேவிடில் ஒன்(று)
ஒளிக்கும்; எனினும் இருள்அட ராதுள் ளுயிர்க்குயிராய்த்
தெளிக்கும் அறிவு திகழ்ந்துள தேனும், திரிமலத்தே
குளிக்கு முயிர்,அருள் கூடும் படிக்கொடி கட்டினனே . 1

### நேரிசை வெண்பா

பொருளாம் பொருள்ஏது? போதேது? கண்ணேது?
இருளாம் வெளியே(து) ? இரவே(து) ? – அருளாளா!
நீபுரவா வையமெலாம் நீஅறியக் கட்டினேன்
கோபுர வாசற் கொடி. 2.

வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்
தாக்கா(து) உணர்வரிய தன்மையனை–நோக்கிப்
பிறித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்குமருள் நல்கக் கொடி. 3.

அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும்–நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையுங்
கூசாமற் காட்டக் கொடி. 4.

அந்த மலமறுத்திங்(கு) ஆன்மாவைக் காட்டியதற்(கு)
அந்த அறிவை அறிவித்தங்(கு) –இந்தறிவை
மாறாமல் மாற்றி மருவுசிவப் பேறென்றுங்
கூறாமற் கூறக் கொடி. 5.

[காஞ்சிபுரம் மெய்கண்டார் ஆதீன முதல்வர், சிலத்திரு. ஞானப்பிரகாச பரமாசாரிய சுவாமிகள் உத்தரவுப்படி துகளறுபோத நூறுவது செய்யுள், கொடிக்கவி ஐந்தாவது செய்யுளாகச் சேர்க்கப்பெற்றது.]

# ஒரு தம்பியின் வாக்குமூலம்



அமரர் ச. திருச்செல்வம்

என் அண்ணா!

உண்மைக்கு உறைவிடமானவனே! என்னை உருவாக்கிய உயிரோவியமே! மனித வாழ்க்கை ஒரு சோதனைக் களம். இக்களத்தில் சாதனை செய்ய முடியவில்லையானால் வேதனைதான் மிஞ்சும், தம்பி! நீ கொழும்புக்கு வா. சாதனைக்கான சலியாத முயற்சியை மேற்கொள்ள வேண்டும் எனக்கூறி என்னை அங்கு அழைத்து ஆற்றுப்படுத்தி மனிதனாக்கினீர்கள். என்நெஞ்சம் மறவா மகானானீர்கள்!

காலம் எதையெல்லாமோ செய்துவிடுகின்றது. காயைக் கனியாக்கும் அதேகாலம் தான்; கனியை காய்ந்த கட்டியுமாக்கி விடுகின்றது. ஒரு புலவர் சொன்னார் ''காலம் கிளிகளையும் இலவங்களையும்தான் ஏமாற்றுமென்பதில்லை நம்மையும் ஏமாற்றிவிடும்'' என்று இந்தக்கால வெள்ளத்தின் பெருக்கும் ஒரு சிதம்பரரகசியமே.

இந்தப் பிரபஞ்சத்தை உருவாக்கி படைத்தல் காத்தல் அழித்தல் அருளல் மறைத்தல் என்னும் பஞ்சகிருத்தியங்களைச் செய்யும் பரமேஸ்வரன் தனது ஐந்தொழில் நடப்புக்கு காலத்தையே கைக்குள் வைத்துக் காரியமாற்றுகிறான் அவன் கைக்குள் இருக்கும் காலம் சிலருக்கு காலன் ஆகிறது. வேறு சிலருக்கு காலதேவன் ஆகிறது.

வாழ்க்கையில் காலம் தேவனாகி உதவவேண்டுமானால் நாம் கடவுளை மனத்திருத்தி வழிபடவேண்டும். வழிபாட்டிற்கு பாடல்நெறியும் ஒருதுணையே, திருமுறைப் பாராயணமே வாழ்வாங்கு வாழச்செய்யும் செந்தமிழ் மந்திரங்கள். மூப்பு பிணி சாக்காடு என்பனவற்றின் துன்பங்களை இல்லாது செய்யும் தோத்திரங்கள் மனிதர் கையில் இருக்க வேண்டிய தமிழாயுதம்

திருநின்ற செல்வமாய் விளங்கிய அண்ணா!

உங்களை நினைத்துக்கொண்டு சூலாயுதம் தாங்கிய ஆதிவைரவர் திருவடிகளில் இத்தோத்திரத் தமிழாயுதத்தை நமது காணிக்கையாய் வணக்கத்தோடு வைக்கிறேன்.

பணிவுள்ள

சண்முகம் சிவராமன்

ஸ்ரீ லங்கா அச்சகம்,
யாழ்ப்பாணம். 3-5-1991